19th March 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சனம் அங்கத்தினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தமிழில் புலமை மிக்கவர்கள். அவர்கள் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கன்னி என்று சொல்லுவது தவறு என்று சொல்ல முடியாது. கன்னித் தமிழ் என்று சொல்லுகிறோம். ஆனால் தமிழைப் பொறுத்த மட்டில் கிருஸ்து வர்களாக இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, ஆதரிக்கிற நிலை இருந்து வந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். கன்னியாகுமரி என்பதற்காக சர்ச்சை வந்திருக்கிறது என்று எடுத்துக்கொள்வது சரியல்ல.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இப்பொழுது ராமகிருஷ்ண தபோவனத்தார் அமைத்து வரும் அந்தக் கோவிலுக்கு நமது அரசாங்கம் எதாவது மான்யம் முதலிய உதவி அளித்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் இதுவரையிலும் ஒன்றும் அளிக்கவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : அந்தப் பாறையில் கோவில் ஒன்று அமைக்க வேண்டும் என்று எதாவது அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறதா? அப்படி ஒரு கோவில் எழுப்பப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல அங்கே ஒரு சிலை வைப்பது என்றால் அது ஒரு கட்டிடத்தில் அமைய வேண்டும். அப்பொழுதுதான் பந்தோபஸ்தாக இருக்கும். பார்ப்பவர்கள் அங்கே போய் தரிசனம் செய்யலாம். அங்கே " மெடிடேஷன் " செய்யலாம் என்று யோசித்து, நாம் அனுமதி அளிக்க முன்வந்திருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : சொறகள் எப்படித் திரிகின்றன என்பதற்காக அதைக் கூறினேன். "ஹாமில்டன பிரிட்ஜ்" என்பது "அம்பட்டன் வாராவதி"; "பார்பர்ஸ் பிரிட்ஜ்" என்று மாறியது போல, கன்யாகுமரி என்பதுதான் கன்யாமேரி என்பதாகத் திரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேனே தவிர, கிருஸ்துவர்கள் தமிழுக்கு ஆக்கம் செலுத்தவில்லை என்ற கருத்திலே சொல்லவில்லை, அவர்கள் ஆக்கம் செலுத்தியுள்ளார் கள், செலுத்துகிறார்கள். அந்தச் சொல் அளவில்தான் இந்தத் திருத்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அதை மட்டும் சான்றாகக் கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் வேண்டியதைச் செய்யும். ஆனால் கன்யாகுமரி என்ற பெயரை மாற்றுவதாக இல்லை.

திரு இராம. அரங்கண்ணல் : குமரிமுனையில் இப்பொழுது இருக்கிற அங்குள்ள ஒரு கோவிலும், அதற்கு அருகிலே கட்டப்பட்டிருக்கிற காந்தி யடிகளின் நினைவுச் சின்னமும் எழிலாக இருந்து கொண்டிருக்கிறது. இன்னொரு கோவில் அங்கு ஏற்பட்டால், இயற்கை எழில் கெடும் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் எதைச் செய்தாலும் இயற்கை எழிலுக்குச் சற்றும் பாதகம் இல்லாத வகையிலே அனுமதி அளிக்கும்.

உப்பு உற்பத்தி

***327** கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடற்கரையை யொட்டிய மாவட்டங்களில் உப்பு உற்பத்தி செய்வதற்காக, அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை குத்தகைக்கு விட உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எவ்வளவு நிலங்களைக் குத்தகைக்குவிட அரசாங்கம் உத்தேசித்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The policy of the Government is to lease lands suitable for manufacture of salt in all the sea coast districts in the State. An extent of about 9,528.71 acres of land is reported to be available in the sea coast districts for lease for manufacture of salt

[19th March 1964

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் உப்பு உற்பத்தி அதிகமாக இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Leprosy hospitals in Tirunelveli district

* 328 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government provide any assistance to Leprosy Hospitals in Tirunelveli district.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes.

Repairs to Subban Channel

* 329 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state —

(*a*) whether there is any proposal to repair the Subban Channel branching off from the Vaigai river near Manamadurai in Ramanathapuram district; and

(*b*) if so, the steps taken to implement the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The proposals are being finalised by the Board of Revenue Food Production).

ராமநாதபுரம் குடிநீர்த் திட்டம்

* 330 கேள்வி—**திரு. கரு. சீமைச்சாமி** : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் நகருக்கான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இத் திட்டம் சம்பந்தமாகப் பரிசீலனை நடந்து வருகிறது.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT.

BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee which met on 18th March 1964 has decided the following further programme of business of the House :—

24th March 1964—Consideration and passing of —

(1) The Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964.

(2) The Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964.